معهد السنة
As-Sunnah College

MahadSunnah

# التطير

# இஸ்லாத்தின் பார்வையில் சகுனம் பார்த்தல்

ஆசிரியர்:
கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்
முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,
ம.:.ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்

WWW.ALSARHAAN.COM
WWW.MAHADSUNNAH.COM

تاميلي தமிழ்

# இஸ்லாத்தின் பார்வையில் சகுனம் பார்த்தல்

**சகுனம் பார்த்தல் என்பது ஒருவர் தனக்கு முன்னால் நடக்கும் சம்பவம், கேட்கும் சத்தம், அல்லது, சில நாட்கள், மாதங்கள் இவற்றை வைத்து தனது முடிவுகளை இயற்றுதல், அல்லது மாற்றுதல்.**

உதாரணமாக: காகம், ஆந்தை, கருப்பு நிறப் பூனை, அல்லது அங்கவீன மனிதன், அல்லது ஸஃபர் மாதம், அதேபோன்று சில இலக்கங்கள் போன்றவற்றை வைத்து சகுனம் பார்ப்பது.

அதாவது, சிலர் பத்தாம் இலக்கத்தை வைத்தும், மேல் நாட்டவர்கள் சிலர் இலக்கம் 13 வைத்து கெட்ட சகுனம் பார்க்கின்றனர். இதேபோல் ஏதாவது ஒரு பொருள் விழும்போதும் அல்லது உடைந்து நொறுங்கும் போதும், அதே போன்று நட்சத்திரங்கள், கிரகங்கள் தோன்றும் இடங்கள் இவற்றை வைத்தும் சகுனம் பார்ப்பதை குறிப்பிடலாம்.

இஸ்லாத்தில் தடை செய்யப்பட்ட சகுனம் யாதெனில், நாம் ஒரு செயலை முன்னெடுப்பதற்கு அல்லது அதிலிருந்து பின்

வாங்குவதற்கு எச் சகுனம் காரணமாக இருக்குமோ அச்சகுனம் தடை செய்யப்பட்டது.

சகுனம் பார்த்து ஒரு செயலில் ஈடுபடுவது மார்க்கத்திற்கு முரணானது. சிலவேளைகளில் ஒரு செயலை முன்னெடுக்கும் போது மனதில் தோன்றும் சில சகுனம் சார்ந்த எண்ணங்கள் தோன்றலாம், ஆனால் உடனே நிறுத்தி விட்டால் பிரச்சினை இல்லை. அதை வைத்து முடிவுகளை எடுக்கக் கூடாது.

**கெட்ட சகுனம் பார்த்தல் ஈமானை பாதிக்குமா?**

ஆம் பாதிக்கும். அல்லாஹ்வின் மீது வைக்கவேண்டிய தவக்குலை பலவீனப்படுத்தும், அல்லாஹ் அல்லாதவற்றுடன் உள்ளத்தை தொடர்புபடுத்திவிடும்.

**கெட்ட சகுனம் பார்த்தல் இணைவைப்பில் எவ்வகையைச் சார்ந்தது?**

இது சிறிய இணைவைப்பை சார்ந்தது, ஏகத்துவத்திற்கு எதிரானது.

நபியவர்கள் சொன்னார்கள்: **கெட்ட சகுனம் பார்த்தல் இணைவைப்பாகும், மேலும் கூறினார்கள்: தொற்றுநோய், கெட்ட சகுனம் பார்பது கிடையாது.**

**கெட்ட சகுனம் பார்க்கும் பழக்கமுடையவர் என்ன செய்ய வேண்டும்?**

அவர் உடனடியாக அல்லாஹ்வின் பக்கம் தௌபா செய்ய வேண்டும் மேலும் அவர்

(அல்லாஹும்ம லா ஹய்ர இல்லா ஹய்ருக, வலா தய்ர இல்லா தய்ருக வலா இலாஹ கய்ருக)

என்று சொல்லிக்கொள்ள வேண்டும்.

**கெட்ட சகுனம் பார்க்கும் பழக்கத்தை எப்படி தவிர்க்கலாம்?**

01. அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை வைத்தல்.

02. அல்லாஹ்வினுடைய விதி, ஏற்பாடை உறுதியாக நம்புதல்.

03. படைப்புகளின் செயற்பாடுகளால் அல்லாஹ்வினுடைய நாட்டத்தில், ஆட்சியில் எந்த

மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்று புரிந்து கொள்ளல்.